# ரோஜா மொட்டு

(கவிதைகள்)

**சத்யபிரபா**

ஆறு மொட்டும்
மலருமென்று
காத்திருக்கவில்லை
அந்த ஒரு
மொட்டுக்குத்தான்
அருந்தவம்

சந்திரோதயம் பதிப்பகம்
மதுரை - 7010997638

# ரோஜா மொட்டு

(கவிதைகள்)

*சத்தியபிரபா*

சந்திரோதயம் பதிப்பகம்
மதுரை. Ph. 7010997639

# நூல் விவரம்

நூலின் பெயர் : ரோஜா மொட்டு
துறை : கவிதைகள்
ஆசிரியர் : சத்தியபிரபா
வடிவமைப்பு : செ. மீனாட்சி
பதிப்பாளர் : சந்திரோதயம் பதிப்பகம்
3/422, திருவள்ளுவர் தெரு
தினமணி நகர், மதுரை-625 018
பதிப்பு : மார்ச், 2022
மொழி : தமிழ்
பக்கங்கள் : 106
விலை : ரூ.100/-

- - - - -

Book : Roja Mottu
Subject : Poems
Translator : Sathiyaprabha
Designer : C. Meenatchi
Publisher : Chandrothayam Pathippagam
3/422, Thiruvalluvar Street
Dinamani Nagar, Madurai–625 018
Publish : March, 2022
Pages : 106
Price : Rs.100/-

# என்னுரை

*'எமக்குத் தொழில் கவிதை*
*நாட்டுக்குழைத்தல்*
*இமைப்பொழுதும் சோராதிருத்தல்'*

என்கிறார் மகாகவி பாரதியார். ஆனால் எனக்குத் தொழில் கவிதை அல்ல. ஆராய்ச்சி, மொழிபெயர்ப்பு, பதிப்புத் தொழில் செயபவள் நான். 'ஆசை பற்றி அறையலுற்றேன்' என்ற கம்பனின் வாக்குப்படி கவிதை போல் மனதில் தோன்றும் வரிகளை ஆசையின் காரணமாக அவ்வப்போது எழுதி வைப்பதும் சமூகவலைத் தளங்களில் வெளியிடுவதும் உண்டு. சில சமூக, இலக்கியச் சிற்றிதழ்களிலும் இக்கவிதைகள் வெளியாயின.

கல்லூரி காலத்தில் கதை, கவிதைப் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்றிருந்தாலும் அதன் பிறகு புனைவிலக்கியத்தில் நாட்டம் சென்றதில்லை. உண்மை தேடும் ஆராய்ச்சியாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் அறிவும் கவனமும் பயணித்தது.

முகநூலில் புலனத்தில் வரும் சில படங்களைப் பார்க்கும் போது அவற்றிற்குப் பொருத்தமான சில

வரிகள் தோன்றும். அவற்றை அப்படங்களின் மீதே பதித்து வெளியிட்டு மகிழந்ததுண்டு. என் எழுத்துக்கும் சிந்தனைக்கும் எப்போதும் ஊக்கமளிக்கும் நன்பர்கள் இச் சித்திரக் கவிதைகளையும் பாராட்டினர். ‘புதிய முயற்சி. தொழில்நுட்பத்தின் உதவியால் இது சாத்தியமாகிறது. புதிய வளர்ச்சி. கவிதையின் புது மலர்ச்சி. அச்சிட்டு வெளியிடுங்கள்’ என்றனர்.

சமூக வலைத் தளங்களில் வண்ணப்படமும் வரிகளும் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. ஆனால் அச்சில் அந்த அழகு வராது. வாசகரின் கவனம் **so called** கவிதை வரிகளின்பால் செல்லும். இங்குக் கருத்தும் உணர்ச்சியும் முக்கியம். வண்ணமோ உருவமோ அல்ல. பார்ப்போம். படிப்போம்.

வாங்கிப் படிப்போருக்கு வாழ்த்தும் நன்றியும்.

# 1.

உனக்காக நானும்
எனக்காக நீயும்
உயிர் வாழும் நேரம்
உன்னதங்கள் சேரும்

பார்த்தாலும் போதும்
பரவசம் தோன்றும்
வாய்வார்த்தை யாவும்
வழியற்றுப் போகும்

## 2.

இருவருக்கும் ஒரே டேஸ்ட்
அவளுக்கு ரோஜா
இவனுக்கு அரளி
இரண்டும் ஒரே நிறம்

# 3.

கையெல்லாம்
கனிரசம்
கவிதையெல்லாம்
தேன் சொட்டும்

# 4.

நீர் நிலம் ஆகாயம்
அத்தனையும் சாட்சி
உள்ளத்தில்
அனுதினமும்
உன் திருக்காட்சி

# 5.



விடிவெள்ளி
கண்டேன்
விடியுமெனக்
காத்திருந்தேன்
விழித்துப் பார்த்தேன்
மேற்கில் சூரியன்

# 6.

என் காதல் நீ கனவு நீ
என்  தாய் நீ,  தமிழ் நீ
என் உயிர் நீ, உடல் நீ
என் கல்வி நீ, கலவி நீ
என் மகிழ்ச்சி நீ,  மூச்சு நீ

நீயின்றி
நானில்லை
நானின்றி
நீயுண்டு

## 7.

### கடற் குதிரை

ஆண் உதிர்க்கும்
குஞ்சுகளை
எண்ணிலடங்கா
பிஞ்சுகளை

தலை குனியும்
தாயுமாய்

நிமிர்ந்து நீந்தும்
நீள் குத்தாய்

# 8.

குளம் முழுக்க அல்லி மலர்
மனம் முழுக்க அன்பு மலர்

பார்த்துக் களிக்கலாம்
பறித்தால் மரிக்கலாம்

# 9.

ஆயிரம் பூக்கள்
உண்டெனினும்
அவை எனக்கு நீயாகுமா?

என்
ஆசை மலர் நீயே
அன்பில்
மலர்ந்தாயே

# 10.

இத்துப் போன
பழந்துணியாய் நான்
இழுத்துத் தைக்க
ஊசியின்றி நீ

## 11.



வழியெங்கும்
விழி வைத்தாள்
வருடமும் கழிந்தது

சிரித்து வைத்தாள்
அவன் வருவானென

# 12.

ஆறு மொட்டும்
மலருமென்று
காத்திருக்கவில்லை
அந்த ஒரு
மொட்டுக்குத்தான்
அருந்தவம்

**13.**

தினமும் தேன்துளி
சேர்ந்தே தீக்கனல்

வாழ்வே தீந்தேன்
வாழவே வந்தேன்

# 14.

ஜோடி சேர்ந்தால்
நீடித்திருக்கணும்
பாதியில் போனால்
பாவம் பிடித்திடும்

# 15.



உச்சிக்கமலத்து அமுதம்
உள்ளுக்குள்ளே இறங்கி
உள்ளமெல்லாம் நிறைந்து
உடலெங்கும் சிலிர்க்கும்

# 16.

முள்ளை மறைத்து
முகத்தில் சிரிப்பு
ரோஜா மொக்குள்
தேன் தேடும் நாவு

## 17.



மலர்ந்த ரோஜாவின்
கள்ளச் சிரிப்பில்
மலராத மொட்டுக்கு
ஏங்கும் தேன் சிட்டு

# 18.

ஆட வந்தவன் ஆடவில்லை
ஆட்டக்காரியும் அசரவில்லை
ஆட்டிவைத்தான் அசராமல்
கட்டிப்போட்டாள் கருத்தாலே

# 19.



ஆனைக்கு அங்குசம்
அவன் மௌனம்
அழுதாலும் தீராது
அவள் சோகம்.

## 20.

இதய ரோஜாப் பூ
இனிப்புச் சிரிப்பு

சர்க்கரைப் பேச்சு
இன்பத்தின் மூச்சு

# 21.

கொத்துப் பூ கொடுத்தாலும்
கொதித்த மனம் ஆறாது
முத்தம் ஒன்று மொழிந்திடு
மொத்தச் சொத்தும் உனக்கே.

# 22.

அணைத்துன்னை
அடிவயிற்றில்
பதுக்கி வைத்தேன்
அசங்காமல் ஒரு முத்தம்
ஆழமாய்க் கொடு

# 23.



பிள்ளைநிலா பூத்திருக்க
விண்ணூஞ்சலில் காத்திருக்க
வளர்ப்புப் பூனை பார்த்திருக்க
வரவில்லை அவன்
வந்ததோ கண்ணீர்

# 24.

மங்கலத்துக்கு ஏங்கி
மஞ்சள் சூடினாலும்
மன்னன் வந்தாலன்றோ
மகிழ்ச்சி மலர்ந்திடும்?

## 25.

நிலவு வந்ததும்
நினைவு வந்தது
நிலவு போனதும்
நினைவு போகலயே

# 26.

நிலவே நீ இருப்பாய்
எம் காதலும் இருக்கும்
நாங்கள் இருப்போமா
காதலர் இருப்பார்கள்

## 27.

**மேகம் திரண்டது**
**மழை வரவில்லை**
**மையல் வந்தது**
**மயக்கம் தீரவில்லை**

# 28.



பவளமல்லி வாசம்
பல கதைகள் பேசும்
பக்கத்தில் நீயிருந்தால்
பரவிக்கிடக்கும் நேசம்

# 29.

*கத்தியைத் தீட்டி*
*காரப்பொடி தடவி*
*ரத்தக் காயமாக்கி*
*முத்தமிட்டுச் சிரிப்பாய்*
*பூங்கொத்தும் கொடுப்பாய்*

# 30.

ஊடலுக்கும் கூடலுக்கும்
இக்கன்னா தான் வித்தியாசம்
'இச்' என்று இருந்திருந்தால்
இந்நேரம் முடிந்திருக்கும்.

## 31.

*இது இரவா பகலா*
*சிட்டுகளின் கொண்டாட்டம்*
*மலர்களாய் நிறைந்து*
*மரத்துக்குப் பொலிவூட்டும்*

# 32.

இரவில் நிலவு
கனவில் உறவு
உன்னுள் நான்
என்னுள் நீ
விடியலில் விலகி
விரைவாய் நழுவி...

**33.**

*காதலைப்
பரிமாறி
கடமையை ஏற்ற
கடற் குதிரையும்
ஓர்
கடலன்னை*

# 34.

இவை இரு தனி பூக்கள்
சேர்ந்தால் சிறப்பழகு
தனியானால் வேறழகு
சேர்ந்தே சிரிக்கட்டுமே

# 35.

இலைக்குள் இலையாய்
கலைக்குள் கலையாய்
கலந்துவிட ஆசை தான்–
காரணங்கள்
தேவையில்லை

# 36.

தாகம் வந்தால்
தவிப்பு எடுக்கும்
பானம் கிடைத்தால்
கலம் கசியும்.

சொட்டு நீர் தங்காது

**37.**



வெள்ளத்தனைய
மலர் நீட்டம்
வேதனையளவு உன்
முக வாட்டம்

# 38.

எட்டிப்பார்த்தது
இரக்கமில்லா நிலா
அவனது கூட்டாளி அன்றோ?
அவலம் தீர்க்காது

## 39.



அமுதைப் பொழியும் நிலவு
அதை
அனலாய்ப் பொழிவதேன்

# 40.

மறந்தான்
மரத்துப்போச்சு
அழைத்தான்
துளிர்த்தாச்சு

## 41.

ஜோடியைத் தேடவே
ஆடி ஆடி
ஜோடியைக் கண்டதும்
கூடி கூடி
ஜோடியைப் பிரிந்ததும்
வாடி வாடி...

# 42.

தொலைந்ததைத் தேடுகிறேன்
கிடைத்தது வேறொன்று

கிடைத்ததை வைத்துவிட்டு
கிடைக்காததைத் தேடுகிறேன்

கிடைக்குமா இன்றாவது?

# 43.

ஒரு பூ சிரித்தது
பறித்தேன்
முள் குத்தியது
முள்ளை ஒடித்தேன்
பூ அழுதது

# 44.

தூயமலரெனக்
கனிந்த காதலில்
எங்கிருந்து கலந்தன
முள் ரோஜா மூன்று?

**45.**

மலரைப் போல்
வெள்ளை மனம்

வாசம் வீசும்
கொள்ளைக் காதல்

உனக்கே அர்ப்பணம்
உள்ளம் சமர்ப்பணம்

# 46.



தோளில் உன்னைச்
சுமந்து கொண்டு
துயரத்துடன் நடக்கிறேன்.

தொலைவில் உன்னை
இறக்கிவிட்டேன்.

தொட வராதே
தொடர்ந்தும் வராதே

# 47.

ரோஜா
நிமிர்ந்தாலும் அழகு
கவிழ்ந்தாலும் அழகு

தின்றால் ருசி
முகர்ந்தால் பசி

பார்த்தால் பரவசம்
தொட்டால் சமரசம்

## 48.



காலையில் அரும்பி
ஒவ்வொரு நாளும் புதுப்பிக்க
பூவாய் மலர்ந்து
தேனாய் இனிக்கும்

சிலநாள் விடுபட
சிவந்து சினமேற
விலகல் தீயில்
வெந்து கருகி
வெறுப்புத் துருப்பிடித்து
வீணாய்ப்போகும்

ஆதலினால்
காதல் செய்வீர்
அனுதினமும்
அனுதினமும்

# 49.

காலை அரும்பிப்
பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்
இந் நாள்

# 50.

மலரும் நுரையும்
மாசற்ற வெண்மை
மணக்கும் மறையும்
மாறாத உண்மை

## 51.



அடுத்த ஜன்மமும்
உன்னோடு தான்

அப்போது நான்
லப் டப் எனத் துடிக்காமல்
அத்தான் அத்தான்
என்று தான் துடிப்பேன்

# 52.

உயிருக்குள் உயிராய்
உணர்வுக்குள் உணர்வாய்
குருதிக்குள் குருதியாய்
நாமிருக்க

உயிரென்றும் உடலென்றும்
நானென்றும் நீயென்றும்
உறவென்றும் பிரிவென்றும்
ஏது இங்கே?

## 53.

வாக்குறுதிகள்
தேர்தலில் மட்டும்
பொய்யாவதில்லை

காதலிலும் தான்

# 54.

தனிமை
எனக்கு
தவிப்பு
அல்ல

துணைக்கு
சோகம்
இருக்கிறது

சுகத்துக்கு
நினைவு
இருக்கிறது.

# 55.



## ஆவிப் புறா

வேலை கிடக்குது
தலைக்கு மேலே
பஞ்சாயத்து நடக்குது
நெஞ்சுக்குள்ள

போராட்டம்
முடியும் நேரம்
ஆவிப்புறா
ஆகாயத்தில்

# 56.

## முத்தமோ மோகமோ

அள்ளிக் கொடுத்த
முத்தம்
அணைத்துக் கொடுத்த முத்தம்
கிள்ளிக் கொடுத்த முத்தம்
கேட்டுக் கொடுத்த முத்தம்

எண்ணிக்கையில் அடங்காது
ஏராளம் ஏராளம்
காதல் பசி தீர்க்கும்
தாராளம் தாராளம்

கண்ணுக்குத் தனி
காதுக்குத் தனி
மூக்குக்கு மட்டுமே
மூன்று மடங்கு
கன்னம் கேட்கும்
நாலு மடங்கு
முத்தக் கணக்கு
பித்துப் பிடிக்கும்



செவ்விதழோ நாவல்கனி
சிவக்க கடிக்க ருசியே தனி
முத்தமிழின் மோகருசி
காமத்தின் காதல் பசி

கன்னம் கனிரசம்
காதுமடல் தனி சுகம்
விரல் நுனி தேன்கனி
தித்திப்போ தனித்தனி

அத்தனையும் எனக்கெனக்கே
அர்த்தநாரி நானே

திகட்டாத தெய்வசுகம்
தேடி வந்த தேவவரம்

## 57.

### சந்தோஷ சங்கீதம்

ராஜகுமாரிக்கு
கப்பம் கட்டினர்
சுயம்வரங்கள்
சுயம் இழந்தன.

வந்தவரெல்லாம்
வாசலுக்கே சென்றனர்
அவனோ சிம்மாசனமிட்டு
அழகாய் அமர்ந்தான்.

ஆயிரம் கோடி
சூரியப் பிரகாசம்
மகுடம் சூட்டி
செங்கோல் ஓச்சினான்.
அவன் ராஜசபையில்
அன்றாடம்

சந்தோஷ சங்கீதம்
மல்யுத்தம், சிலம்பாட்டம்
மகாசம்புரோட்சணம்

அதிகாரக் கொடி
ஆகாயத்தைத் தொட்டது
அன்பென்ற பேரரசு
அகிலமெங்கும் விரிந்தது

ஆட்டம் அடங்கி
அமைதி நிரம்பி

ஆறு ஒன்று
அழகாய் ஓடியது.

# 58.

## அட்சய பாத்திரம்

ஐம்புலன்களால்
அவள்பசி தீர்த்தாள்,
அணைத்த கரங்களில்
அனலானாள்

பாலைவனச் சோலை ஒன்றைக்
கண்டான், களித்தான்,
இனித்தான் வாழ்க்கை
என்று நினைத்தான்
ரசித்தான், ருசித்தான்

பழக பழக அவனுக்குப்
பசி தான்;
பருகப் பருக
அவளுக்கு ருசி தான்;

வாழ்வின் சுவை தீரும் முன்னர்
இன்பக் கேணி தூர்ந்து போகுமோ!
வற்றாத ஜீவ நதி
ஆசைக் காதல்-
வளைந்து கொடுத்து நீ
நிமிர்ந்து நில்

தேடி வந்தவள்
திணைப் புலம்
தேடக் கொடுத்தவன்
கிளிக்கூட்டம்

# 59.



## பருவநிலை மாற்றம்

பருவம் மாறும்
பட்சம் மாறும்
கொத்தும் கிளியால்
குற்றுயிர் ஆகும்,
கொத்தக் கொத்த
குலைந்தே போகும்.

வற்றாத ஜீவ நதியைத்,
தூர்த்தான்
ஈரமற்ற மணலாறாய்ப்
பார்த்தான்

## 60.

### பாத்திரம்

ஆசைக் கணவனின்
அன்புப் பாத்திரம்,
அள்ள அள்ளக் குறையாத
அட்சய பாத்திரம்,

தாமரைக் குளத்து
மண்டுகம் அது,
கணித்துப் பார்த்து
கால நேரம் கேட்டு,

அறிவுப் பிள்ளை வேண்டி
விரதம் பல நோற்று
கூடிப் பிரிந்த வேளை
ஜனிச்ச சிசுவும் ஊமை

வாயில்லா பூச்சி
அன்னையைப் போல்

## 61.

### நேசப் புறா

பிரபஞ்சத்தினும் பெரியது
பேசப் பேச தீராது
கேட்கக் கேட்க தெவிட்டாது;

பொங்கிப் பூரித்து
பிறப்புப் பல எடுத்து
தொட்டு தொடர்ந்து வந்து
தோளோடு தோள் சேர்ந்து



காதைக் கடித்து
கனி முத்தம் கொடுத்து
நெஞ்சுக்குள் ஓடி
பிஞ்சு விரல் தொட்டு
உடல் சிலிர்த்து
உள்ளம் பொங்கி

நேசக் கடலாடி
நினைவுப் புனலாடி
உறைந்து நின்றது
ஒரு ஜோடிப் புறா

## 62.

**புலம்பெயர் பறவையா?**

புலம்பெயர் பறவையா நாம்?
இதற்கென்று பிறந்து வந்து
இனிய உறவு கொண்டு
கூடிக் குலாவி
கொஞ்சி மகிழ்ந்து
குடும்பமாய்த் திரும்பி

மீண்டும் அடுத்த பருவம்
ஜோடியாகக் கிளம்பி வந்து
கூடிக் குலாவி
கொஞ்சி மகிழ
புலம்பெயர் பறவையா நாம்?

நேரமும் நிமிடமும்
நெரித்துக் கொல்ல
நினைப்பதே பாவமென
வேலைகள் சொல்ல
நெஞ்சம் நிறை காதல்

# 63.

## இமையின் இருள்

ஒவ்வொரு முறையும்
ஓயாது ஒழியாது

இமை மூடியதும்
இருள் கூடியதும்
எங்கிருந்தோ வந்து
என் அருகில் இருந்து
காதல் குறும்பு செய்யும்
கட்டான கட்டழகே

விழி திறந்ததும்
வெளிச்சம் பிறந்ததும்
விலகி ஓடி விடும்
மாயம் என்னவோ?

## 64.

உன்னோடு தானே
பேசிக்கொண்டிருக்கிறேன்
ஏன் தொலைபேசியில்
அழைத்து
தொந்தரவு செய்கிறாய்?

## 65.



இதயம் உடைந்து
நொறுங்கும் போது
இறைவி வருவாள்
இணைத்து வைப்பாள்
இதுவே
விதியின் விளையாட்டு

# 66.

விதி
நயாகராவாய்
கொட்டுது

எதிர் நீச்சலிட
துணைக்கரம்
நீட்டு

# 67.



## அறியாமை

*மூச்சு விட்டதும் தெரியல*
*மூழ்கி விட்டதும் புரியல*

*நீந்துகிறேன் என்று*
*நீ நினைக்கிறாய்*

## 68.



ஒரு மீன்
கிடைத்தது;
உறு மீன் அல்ல

இன்பம் தரு மீன்

# 69.

தாமரை மொட்டல்ல
விடியலுக்காய் ஏங்க

ரோஜா மொட்டு நீ
தொட்டதும் மலர்வாய்

## 70.

காதல் மலர்மாலை
கனவுச் சிறகு

தாலி
ஒரு
தங்கச் சிம்மாசனம்

# 71.



ஈரமின்றி காய்ந்து
பாளம் பாளமாய்
வெடித்துப் போனாள்.

இந்திரன்
இரங்கவில்லை
இடி மழை
ஏதுமில்லை

பெருந் தொற்றின்
பேய்க்காற்றில்
தொற்றுமில்லை,
தொடுப்புமில்லை,

நடைப் பிணம்
ஒரு
தனிப் பிணம்

## 72.

### தழுவல்

பேசத்தான் வந்தோம்
பேசிக்கொண்டுதான்
இருந்தோம்

இது எப்போ எப்படி...

# 73.

## கடற்கன்னி

*காதலை இசைக்கும்*
*கடற் கன்னிகளுக்கு*
*இரவு தான் தெரியும்*
*பகல் தெரியாது*

## 74.

## மிளகாய் ருசி

மிளகாய்ச் சொற்கள்
அழகாய்ப் பேசுவான்
அழுதால் சிரித்துக்

கடையை மூடுவான்

## 75.

மழை ஓய்ந்த மரத்தடியில்
மனக்கதவு
தாள் திறக்கும்
பூத்த பூ புன்னகைக்கும்
நினைவுச் சாரல்
குளிரெடுக்கும்

**76.**

இதய ரோஜாப்பூ
இனிப்புச் சிரிப்பு

சர்க்கரைப் பேச்சு
இன்பப் பெருமூச்சு

# 77.

கரையோரம்
காத்திருந்தாள்
காதல் வரக்கூடும் என்று

ஆழிப் பேரலையில்
அவள் அடையாளம்
தெரியவில்லை

**78.**



கண்ணா
உன் அழகை
நான் ரசிக்க
உபாயமொன்று சொல்
என்றேன்

‘இதயத்தில் வந்து நீ
இருந்து கொள்’
என்றாய்

‘அங்கிருந்தால் உன்னழகை
எப்படி நான் காண்பேன்?’

‘இதயத்தில் நீயிருந்தால்
இதயமே அழகுதான் டி’

# 79.



ஆணாய் பிறந்து
ஆயிரமாய்
பிரசவித்த
சமத்துவச்
சின்னம்

அன்னையுமான
அழகிய
கடற்குதிரை

## 80.

இரவு வந்ததும்
நிலவு வந்தது

நிலவு வந்ததும்
நினைவு வந்தது

நினைவு வந்ததும்
உறவு வந்தது

ஊடல் வந்ததும்
உதிர்ந்து போனது.

# 81.

தொட்டால் எரியும் சுடர்
தொடர்ந்தால் வளரும் இடர்
நிமிர்ந்தால் பறக்கும் பாவை
குனிந்தால் தேவதை போதை

## 82.

காலை காபி குடிச்சு
பண்டம் பல தின்றாலும்
உன்
நாவல் கனியிதழ்
சுவைத்திட
நாக்கும் மனசும்
தவிக்குதே

# 83.

தாமரை மொட்டு
மேலே தேன் சிட்டு
சிட்டு பாடும் ராகம்
இதழ் படும் காயம்

# 84.

ஆழிப் பேரலையை
சீறும் கடலலையை
அமைதி நதியாக்கும்
மந்திரக் கோல் அன்றோ?
உன் சுந்தரச் சொல்.

அறியாய் நீ
அறிவேன் நான்

# 85.

ஒத்தி ஒத்தி முத்தமிட
ஒதுக்கினாள் ஆயிரம் பூ
பூவால் முத்தினால்
பூமேனி நோகுமென்று
இதழால் முத்தினாள்
இன்பங்கள் சேருமென்று

**86.**

அவனிடம் தோற்றாள்
அவனை வென்றாள்
காதல் களத்தில்
தோற்றவர் வென்றார
காலம் மாறியது
காளியம்மையும்
கால் தூக்கி ஆடினாள்

# 87.



வாசம் காட்டி
பழம் அழைக்கிறது
பச்சைக் கிளியை.

பாதி தின்றதும்
பக்கத்தில் நோக்கும்
அடுத்த பழத்தை

**88.**

தொடுவாள் தேவதை
தொடரும் வாதை
தருவாள் பாவை
தவிப்பான் காளை

## 89.

நொடிக்கொரு தரம்
நெருப்பில் குளித்து
நிலத்தில் நீந்துவது
யாருக்குத் தெரியும்?

வெறுப்பும் வசவும்
தோலை உரித்து
உப்பைத் தடவுவது
ஊருக்கா புரியும்!

# 90.

வெறுப்பு நெருப்பில்
காதல் தோட்டத்தின்
பூக்கள் கருகின.
இலைகள் கருகின.

தீண்டா நெருப்பிலும்
இதய ரோஜாக்கள்
கருகவில்லை.
புது மொட்டு முகிழ்க்க
மறுக்கவில்லை

கருகலிலும்
இன்பக் காதல் வாசம்

# 91.

அவனுக்காகக் காத்திருக்க
அவன் அவளை
வெறுத்திருக்க

'வாச மலர் வாடும் முன்னே
வந்து விடு ஒரு நாள்'

'ஜீவநீர் ஊற்றிவிடு
ஜீவனைப் பரமேற்றிவிடு'

**92.**

இதழ் இதழாய் விரித்து
இனிய மணம் பரப்பி
வண்டுக்குக்
காத்திருக்கும்
வாச மலரை

வெடுக்கெனப் பறித்து
முகர்ந்து பார்த்து
ரசித்து மகிழ்ந்து
வீசி எறிந்துவிடும்
வீனர்களின் பொற்காலம்

# 93.



இன்று காணலாம்
கண்டு களிக்கலாம்
உண்டு சுவைக்கலாம்

பொழுதாகிவிட்டதே
கனவாகிவிட்டதே

# 94.

ஆசைப் பலா
என் நேசப்பலா
முள்ளாய்க் குத்தி
தேனாய்த் துளிர்க்கும்
தித்திக்க சுசந்து
திகட்டாமல் சிரிக்கும்.

# 95.

*மலர்ந்தாள் ராதா*
*கலந்தான் கண்ணன்*
*சிறைப்பட்டாள்*
*நிறைவுற்றாள்*

## 96.

**கட்டியணைத்துக்**
**கவிதை சொல்லி**

**கலந்த கோலம்**
**கனா காலம்**

# 97.

விடியும் என்று
காத்திருந்தேன்

பொழுது இன்னும்
சாயவில்லை

**98.**



அகம் கொதித்து
முகம் புதைத்து
அழுது ஏங்கிட
அணுகி வந்ததென்
ஆசைப் புறா நேசப் புறா

# ஆசிரியரின் பிற நூல்கள்

எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்:

1-21. வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர்
என்ற பெயரில் தொடங்கும் வரிசையில்
நூல்கள் 21

22. சென்னைப் பெருநகராட்சியின்
முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல்
சா. துரைசாமி அவர்களின்
சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும்
மொழிபெயர்ப்பு

ஆங்கில நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்பு

23. Indian Women-Changes and Challenges
(இந்திய பெண்கள்- சாதனைகளும் சவால்களும்)
24. The Globalisation: An Urban Theology
(உலகமயமாக்குதல் நகரிய இயற்பியலும்)
25. Water Privatisation (for PET, Madurai)
(தண்ணீர் தனியார் மயமாக்கல்)
26. Assisted reproductive technologies and its
(impact on Women (SIRD, Madurai
27. Eco Vision and Mission
28. Bachelor's Study Material for Social Science
[INGOU, Madurai]

- Forgein News Kamalam Info
- News, P. Guru.com
- Articles on Eye Care, Aravind Eye Hospital, Madurai

தமிழ் நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு
கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகள்

29. Shades of the Flowering Tree
30. Songs of Dryness
31. Speaking with You
32. Therapist of the Finest Art
33. Language of Love
34. A Lady at the little gate
35. Honey Hive
36. Ambrosial Kiss (Editor)
37. Folowing Dusty Feet (in print)

பேரா. முனைவர் ஞானசேகரனின் நூல்கள்

38. Emerging Mallarism
39. Festival of Lord Indra
Role of Devendirar's in Indian war of Independence
40. (Sundaralingam)
41. Re-reading of Palu Literature
42. Mallariyan Literature
43. Frontyard without My Dad (Poem)

மொழிப்பட நூல்

44. Easy English
45. Tamil for Non-Tamils

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

46. பண்பாட்டு நகர்வுகள்
தமிழ்நாட்டில் இருந்து ஜப்பானுக்கு
47. பெண் தெய்வ வழிபாடு
48. தேவேந்திரன்
49. மருதநிலப் பெண் தெய்வங்கள்
50. இருநிலத்தில் திருமுருகன்
51. முன்னோர் வழிபாடு
52. வேளாண்மரபில் விதைப்பும்பூப்பும்
53. யானைக் கடவுள்
54. பெண் பூப்பின் புனிதவழிபாடு

கவிதைத் திறனாய்வு நூல்கள்

55. பாடுபொருளும் பாசப்பொருளும்
56. பூ மர நிழலின் களமும் காலமும்
57. "2020" தைமாதத்தில் இன்று கவிதையில்
அடிக்கருத்தியல்ஆய்வு
58. கவிதையில் காதல்
59. முத்தமிழ் விரும்பியின் பயணக் கவிதைகள்

மொழிபெயர்ப்பு ஆய்வு நூல்கள்

60. மொழிபெயர்ப்பியல் ஆய்வு
61. கவிதை மொழிபெயர்ப்பு
62. நவீன மொழிபெயர்ப்பு உத்திகள்

ஆங்கிலக் கவிதை மொழி பெயர்ப்பு

63. எட்டுத்திக்கும் செல்வீர்
64. அவன் கடவுளுக்கு நிகரானவன்
65. செக்கச் சிவந்த ரோஜா
66. கலீல் ஜிப்ரானின் மணலும் நுரையும்
67. கலீல் ஜிப்ரானின் பாடல்கள் 14

புனைவிலக்கியம்

68. அமராவதியின் காதல் (சிறுகதைகள்)
69. ரோஜா மொட்டு (கவிதை சித்திரங்கள்)

Sangam Classics in Enlgish (Selected Poems)

70. Ainkurunuuru
71. Kurunthokai
72. Puranaanuuru